Registered as a Newspaper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
31-10-1993
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி — Peoples Daily

ஈழநாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஐப்பசி 14 | (30-10-1993) | சனிக்கிழமை | ஓசை 254

## சேதமடைந்த வீடுகள் திருத்த 170 கோடி நிதி ஒதுக்கீடு

கடந்தகால வன்செயல்களால் சேதமடைந்த வீடுகளைத் திருத்தியவர்களுக்கு வழங்குவதற்கென 170 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 1990 யூன்மாதத்திற்கு முன்னர் உடைந்த வீடுகளைத் திருத்தியவர்களில் பெரும்பாலான வர்களுக்கு நஷ்டஈட்டுத்தொகை வழங்கப்படாதிருந்தது தெரிந்ததே. இவர்களுக்கு வழங்குவதற்கெனவே 170 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் திறைசேரியில் நிலவும் நிதிநெருக்கடியால் அடுத்த வருடம் ஜனவரி மாதமளவில் இத்தொகை முழுமையாக இங்கு வந்து சேருமெனவும் யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார். இந் நிதி இங்கு வந்து சேர்ந்ததும் நஷ்டஈடு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பஸ்ஸில் சென்ற 200 தமிழர் கொழும்பில் பொலிசாரால் கைது!

(கொழும்பு)

**கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்தும் அதிகரித்த வண்ண முள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன்ஒரு கட்டமாக தற்பொழுது பஸ் வண்டிகளில் பயணம் செய்யும் தமிழர்கள் இடைநடுவில் வைத்து கைது செய்யப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த வகையில் கொழும்பு புறநகர்பகுதியில் உள்ள அளுத்மாவத்தைபகுதியில்வைத்துசுமார் 200 தமிழர்கள்கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.**

கடந்த சனிக்கிழமைமட்டக்குழி நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்வண்டிகளை மேற்படி பகுதியில் வைத்து இடைநிறுத்தி சுமார் இருநூறுக்கும் அதிகமான தமிழ் இளைஞர்களை பொலிசார் கைது செய்தனர். இந்த நடவடிக்கையில் சுமார் நாற்பதுக்கும் அதிகமான பொலிசார் ஈடுபட்டனர். ஒவ்வொரு பஸ் வண்டிகளையும் நிறுத்தி சோதனை செய்யும் பொலிசார் பஸ் வண்டிகளில் வந்த அத்தனை தமிழ் இளைஞர்களையும் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்படும் இளைஞர்கள் ஜீப் வண்டிகளில் ஏற்றப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பில் வைத்து

## நல்லை ஆதீன முதல்வர் தடுத்து வைத்து விசாரிப்பு

(கொழும்பு)

நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறி ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நீர்கொழும்பில் வைத்து பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை தந்துள்ளதாக கொழும்பு இந்து இளைஞர் மன்றம் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அப்பாவிகளை இவ்வாறு கொழும்பில் தொடர்ந்து கைதுசெய்துவருவதை நிறுத்துமாறும் அக் கடிதத்தில் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## இனப்பிரச்சினையைத் தீர்க்க கட்சிகளுக்கு ஆர்வமில்லை

சபாநாயகர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு இராணுவம் மூலம் தீர்வுகண்டுவிட முடியாது என சபாநாயகர் எம். எச். முகமட் தெரிவித்தார். தொழிற்சங்கத் தலைவர் அஸீஸின் நினைவுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்,

கொழுந்துவிட்டெரியும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இங்குள்ள அரசியற்கட்சிகள் ஆர்வம்காட்டவில்லை. பிரச்சினைக்குத் தீர்வுகாணப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் தவறிவிட்டது என்றும் சபாநாயகர் முகமட் கவலை தெரிவித்தார்.

## எழுதுவினைஞர் நியமனத்திற்கு அரச அதிபருக்கு அனுமதி

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் அரச எழுது வினைஞர் பதவிகளுக்கும் அதற்கு சமமான பதவிகளுக்கும் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்ப நேர்முகப் பரீட்சைகளை நடத்தவும் நியமனங்கள் வழங்கவும் யாழ். அரச அதிபருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடத்தப்பட்ட எழுத்து பரீட்சையில் சித்தியடைந்தவர்களது பட்டியலில் இருந்து அவ்வப்போது மேற்படி பதவிகளுக்கு வெற்றிடங்கள் ஏற்படும்போது நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

## நவம்பர் இறுதிவரை பதவி பொறுப்பேற்கலாம்

(நமது நிருபர்)

எழுதுவினைஞர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைக்கும் வட-கிழக்கு மாகாண சபையில் நியமனம் பெற்றோர் நியமனத்தை ...

மனக் கடிதங்கள் காலம்தாழ்த்தியே அவர்களுக்கு கிடைத்தமையால் உரிய திகதியில் அவர்கள் தமது பதவியைப் பொறுப்பேற்க முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது. இது விடயமாக வட - கிழக்கு

## வடபகுதி உணவு தாமதம் அரசின் திட்டமிட்ட செயல்

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

வடபகுதிக்கான உணவுப் பொருள்களை அனுப்பிவைப்பதில் அரசு வேண்டுமென்றே காலம் கடத்துவதாக யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருள்களை ஏற்றிக்கொண்டு வரும் கப்பல்கள் குறித்த காலத்திற்குள் இங்கு வந்து சேருவ... மேலும் விளக்குகையில் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்களில் பொருள்களை ஏற்றும் போது அப்பொருள்கள் சிறிலங்காவின் முப்படைகளாலும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பரிசோதனை செய்யப்படுகின்றன இதன்போது அனைத்து பொதிகளும் பிரிக்கப்பட்டு அதற்குள் இருக்கும் பொருள் ... வாறு தனித்தனியாகச் சோதனையிடப்படுகின்றன. இவ்வாறு சோதனையிடப்படுவது குறித்து தான் ஜெனரல் வனசிங்காவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போதே அந்தந்த இடங்களில் வைத்து சோதனையிட்டபின் கப்பலுக்கு கொண்டுசெல்லும்படி ஆலோசனை கூறியதாக

## கிழக்கு மாகாணத்தில் ஜனவரியில் தேர்தல்

டி.பீ. விஜேதுங்க தெரிவிப்பு

[கொழும்பு]

ஜனவரியில் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடாத்தப் போவதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அறிவித்துள்ளார். ஆனால்தேர்தலுக்கான திகதியை அவர் அறிவிக்கவில்லை.

பிரச்சினைக்குரிய வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றிய பொதுவாக்கெடுப்புதேர்தலை அடுத்துவிரைவில்இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஐ.தே.கவில் இணைய அநுரா விண்ணப்பம்

(கொழும்பு)

லண்டனிலிருந்து திரும்பிய அநுரா பண்டார நாயக்கா நேற்று தனது ஐ.தே.கவில் சேர்வதற்கான விண்ணப்பப் படிவத்தை ஜனாதிபதி விஜேதுங்கவிடம் ஒப்படைத்தார். ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் அமைச்சர் சொக்ஸியும் உடனிருந்தார்.

அநுராவின் விண்ணப்பத்தை ஜனாதிபதி கட்சியின் பொதுச் செயலர் சிறிசேனா கூரேக்கு அனுப்பிவைத்தார்.

## நிவாரணம் குறித்து புதிய சுற்று நிருபம்

வடபகுதியில் இடம் பெயர்ந்த ஒருவர் இடம்பெயராத ஒருவரை திருமணம் செய்தால் அவர்களுக்கான இடம் பெயர்ந்தோர் நிவாரணம் நிறுத்தப்படும் இத்தகைய சுற்றுநிருபம் சிறிலங்கா அரசி... பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த பகுதியில் உள்ள ஒருவர் இடம்பெயர்ந்த பகுதியில் உள்ள ஒருவரை திருமணம் செய்தால் மட்டுமே அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அந்த சுற்று

## அரச அதிபருக்கு அனுமதி

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் அரச எழுதுவினைஞர் பதவிகளுக்கும் அதற்கு சமமான பதவிகளுக்கும் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்ப நேர்முகப் பரீட்சைகளை நடத்தவும் நியமனங்கள் வழங்கவும் யாழ். அரச அதிபருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடத்தப்பட்ட எழுத்து பரீட்சையில் சித்தியடைந்தவர்களது பட்டியலில் இருந்து அவ்வப்போது மேற்படி பதவிகளுக்கு வெற்றிடங்கள் ஏற்படும்போது நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

## நவம்பர் இறுதிவரை பதவி பொறுப்பேற்கலாம்

(நமது நிருபர்)

எழுதுவினைஞர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைக்கும் வட-கிழக்கு மாகாண சபையில் நியமனம் பெற்றோர் நியமனத்தை பொறுப்பேற்கும் இறுதி திகதி நவம்பர் மாத இறுதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நியமனத்தைப் பொறுப்பேற்கும் இறுதித்திகதி முன்னர் ஒக்டோபர் 30 என அறிவிக்கப் பட்டிருந்தமை தெரிந்ததே. இதே வேளை நியமனம் பெற்றவர்களது நியமனக் கடிதங்கள் காலம்தாழ்த்தியே அவர்களுக்கு கிடைத்தமையால் உரிய திகதியில் அவர்கள் தமது பதவியைப் பொறுப்பேற்க முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது. இது விடயமாக வட - கிழக்கு மாகாண சபையுடன் அரசாங்க அதிபர் தொடர்பு கொண்டதை அடுத்து நவம்பர் 30 வரை நியமனத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதியை வடக்கு - கிழக்கு மாகாணசபை நீடித்துள்ளது. (சி)

## எழுதுவினைஞர் நேர்முகப் பரீட்சை யாழ். இல் நடைபெறும்

(நமது நிருபர்)

எழுதுவினைஞர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் மத்திய அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்த விண்ணப்பதாரிகளில் பரீட்சையில் தேர்ச்சி பெற்று கொழும்பிற்கு நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு அழைக்கப்பட்டோருக்கு வெகுவிரைவில் அந்நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

அரசாங்க அதிபர் மேற்கொண்ட முயற்சியை அடுத்து மேற்படி நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு பொது நிர்வாக அமைச்சு அனுமதி அளித்ததாகவும் இந்நேர்முகப் பரீட்சைக்கான திகதிகள் வெகுவிரைவில் அறிவிக்கப்படும் எனவும் மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## ஆசிரியர் வெற்றிடம் விரைவில் நிரப்பப்படும்

[நமது நிருபர்]

யாழ்.மாவட்டத்தில்நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளதாக கல்விச் சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் பல ஆசிரியர்வெற்றிடங்கள்நீண்டகாலமாக நிரப்பப்படாதிருப்பது தெரிந்ததே. தற்போது யாழ். மாவட்டத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் பற்றிய புள்ளிவிபரங்களுடன் எதிர்வரும் இரண்டாம் திகதி கொழும்பிற்குவருமாறு யாழ்.

(03 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழா!

வழிவிட்டு, வழிவிட்டு
வாழ்விடம் இழந்து விட்டோம்
இனிந் தலைநிமிர்ந்து கொள்வோம்
போராட்டமே புதுவாழ்வு தரும்
போர்மேகம் சூழ்கிறது
புறப்படு தமிழா!
பிரபாகரன் காலத்தில்
புதுவரலாறு படைத்த பெருமை
எங்களுக்காகட்டும்.

அதிகமான தமிழ் இளைஞர்களை பொலிசார் கைது செய் ... வண்டிகளில் வந்த அத்தனை ... தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

# வடபகுதி உணவு தாமதம் அரசின் திட்டமிட்ட செயல்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

வடபகுதிக்கான உணவுப் பொருள்களை அனுப்பிவைப்பதில் அரசு வேண்டுமென்றே காலம் கடத்துவதாக யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருள்களை ஏற்றிக்கொண்டு வரும் கப்பல்கள் குறித்த காலத்திற்குள் இங்கு வந்து சேருவதில்லை என சுட்டிக்காட்டிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இத்தாமதம் குறித்து அவர் மேலும் விளக்குகையில் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்களில் பொருள்களை ஏற்றும் போது அப்பொருள்கள் சிறிலங்காவின் முப்படைகளாலும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பரிசோதனை செய்யப்படுகின்றன இதன்போது அனைத்து பொதிகளும் பிரிக்கப்பட்டு அதற்குள் இருக்கும் பொருள்கள் தனித்தனியே வெளியே எடுக்கப்பட்டு கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. மருந்து பொருள்கள் கூட இவ்வாறு தனித்தனியாகச் சோதனையிடப்படுகின்றன. இவ்வாறு சோதனையிடப்படுவது குறித்து தான் ஜெனரல் வனசிங்காவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போதே அந்தந்த இடங்களில் வைத்து சோதனையிட்டபின் கப்பலுக்கு கொண்டுசெல்லும் படி ஆலோசனை கூறியதாகவும் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

# அரசின் வன்முறைகளே அகதிகள் உருவாக 'காரணம்

## பிரிட்டிஷ் அகதிகள் நலன்காப்பு பிரிவு தெரிவிப்பு

(லண்டன்)

பிரிட்டனில் உள்ள அகதிகள் நலன் காப்பு பிரிவான பிரிட்டிஷ் ரிபூஜி கவுன்சில் இலங்கை அகதிகள் முடிவற்ற நீண்ட பயணம் என்ற தலைப்பில் 66 பக். அறிக்கையை வெளியிட்டுள்ளது இலங்கையில் கடந்த 10 ஆண்டுகளாக நடைபெறும் போர் பல இழப்புகளை ஏற்படுத்தியுள்ள போதிலும் பல சாதாரண மக்கள் அமைதியாக வாழவே இன்னமும் விரும்புகின்றனர் என இந்த ஆய்வுக்கட்டுரையை எழுதிய ஹென்ஸ்மன் கூறுகிறார்.

நடுநிலையான வெளிநாட்டு மத்தியஸ்தம் மூலம் இப்பிரச்சினைக்கு அமைதி காண முடியும் என தாம் பேட்டி கண்ட பலர் கூறியதாக ஹென்ஸ்மன் கூறுகிறார் பேட்டி காணப்பட்ட பல அகதிகள் இன்னமும் நம்பிக்கையுடனேயேஇருப்பதாகவும் கூறும் அவர் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தமைக்கான காரணத்தையும் விரிவாக விளக்கியுள்ளார்.

அரசால் தூண்டப்பட்ட வன்முறையே இவர்கள் இருப்பிடம் விட்டு ஓடுவதற்கு காரணமாக இருந்துள்ளது அகதிகள் சென்று தஞ்சமடைந்த நாடுகளிலும் அவர்கள் இன்னல்பட்டனர் பிரிட்டனில் இனவெறி தாக்குதலுக்கு,

(03 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

கடந்த 16ஆம் திகதியன்று திருமலை மாவட்டம் திரியாய் பகுதியில் விடுதலைப்புலிகளின் முகாமைச் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த லெப். நடேஸ்/இசைவாணன்(கோணலிங்கம் மாணிக்கராசா,

(03ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய தூதுவராலயத்திற்கு பாதுகாப்பு அதிகரிப்பு

## முஸ்லிம்கள் தாக்கலாம் என அச்சம்

கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் முஸ்லிம்களால் தாக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக நேற்று அப்பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது காஷ்மீர் ஹஸ்ரத்பால் மசூதியை இந்திய இராணுவம் 14 நாள்களாக முற்றுகையிட்டிருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொழுகை நாளான நேற்று முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் நடத்தலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும்தொழுகையின்பின் முஸ்லிம்கள் அமைதியாகசென்றுவிட்டனர் அத்துடன் இந்தியருக்கு சொந்தமான கொழும்பு டீலக்ஸ் தாஜ் ஹோட்டலிலும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

## ஐ.தே.கவில் இணைய அநுரா விண்ணப்பம்

(கொழும்பு)

லண்டனிலிருந்து திரும்பிய அநுரா பண்டாரநாயக்கா நேற்று தனது ஐ.தே.கவில் சேர்வதற்கான விண்ணப்பப் படிவத்தை ஜனாதிபதி விஜேதுங்கவிடம் ஒப்படைத்தார். ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் அமைச்சர் சொக்ஸியும் உடனிருந்தார்.

அநுராவின் விண்ணப்பத்தை ஜனாதிபதி கட்சியின் பொதுச் செயலர் சிறிசேனா கூரேக்கு அனுப்பிவைத்தார்.

## நிவாரணம் குறித்து புதிய சுற்று நிருபம்

வடபகுதியில் இடம் பெயர்ந்த ஒருவர் இடம்பெயராத ஒருவரை திருமணம் செய்தால் அவர்களுக்கான இடம் பெயர்ந்தோர் நிவாரணம் நிறுத்தப்படும் இத்தகைய சுற்றுநிருபம் சிறிலங்கா அரசினால் வடபகுதி பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த பகுதியில் உள்ள ஒருவர் இடம்பெயர்ந்த பகுதியில் உள்ள ஒருவரை திருமணம் செய்தால் மட்டுமே அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அந்த சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'யாழ்தேவி' நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட வீடுகள் அமைக்கும் பணியில் அரச சார்பற்ற நிறுவனங்கள்

(நமது நிருபர்)

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையால் இருப்பிடங்களை இழந்த குடும்பங்களுக்கு குடிசைகள் அமைத்துக் கொடுக்கும் பணியில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஈடுபட்டுள்ளது.

அண்மையில் ஆனையிறவு முதல் கிளாலி வரை மேற்கொள்ளப்பட்ட மேற்படி இராணுவ நடவடிக்கைகளால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள தமது குடியிருப்புக்களை இழந்ததுடன் பல பெறுமதியான சொத்துக்களையும் இழந்து அகதிகளாக இடம் பெயர்ந்தமை தெரிந்ததே.

இதில் அல்லிப்பளை பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த 84 குடும்பங்களுக்கு இலங்கை செஞ்சிலுவை சங்கம் உடுபுடவைகளையும் சமையல் பாத்திரங்களையும் வழங்கியுள்ளது. இதேபோல்கிளாலிப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 115 குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நி[illegible]ம் உடுபு[illegible]வைகளையும் சமையல் பாத்திரங்களையும் வழங்கவுள்ளது.

இதேபோல் சிறிலங்கா முப்படைகளும் கிளாலி பகுதியில் மேற்கொண்ட தாக்குதல்களாலும், அழிப்பு நடவடிக்கைகளாலும் தமது வீடுகளை இழந்த சுமார் 199 குடும்பங்களுக்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் சில வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இதில் பெருமளவு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச, பா)

## கூட்டுறவுப் பரிசோதகர் பரீட்சை யாழ். இல் நடக்கும்

(நமது நிருபர்)

கூட்டுறவுப் பரிசோதகர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் ஆறாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சை முன்னர் கொழும்பில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் யாழ் அரசாங்க அதிபர் எடுத்த முயற்சியால் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது

இதனை அடுத்து இப்பதவிககு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் இவை இன்று தபால் மூலம் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச,நி)

## துப்பாக்கிச் சூடு

(மல்லாகம்)

தெல்லிப்பழைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுப்பகல் பல தடவைகள் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். கடந்த சில தினங்களாக இப்பகுதியிலிருந்து இராணுவத்தினர் துப்

(03ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணவில்லை

A 75664 இலக்கத் துவிச்சக்கர வண்டியை காணவில்லை. கண்டவர்கள் சந்திரன்(ஜீன்)149 கதீற்ரல் லேன், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன்தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (6421)

### ஆனந்தம் சீயாக்காய் பவுடர்

சித்த மருத்துவ ஆலோசனைப்படி தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் பேன், சொடுகு, அழுக்கு அகற்றி. சுகவாழ்வுக்கு உகந்தது. மொத்தமாகவும் சில்லறையாகவும்கிடைக்குமிடம், குகன் ஸ்டோர்ஸ், யாழ்ப்பாணம், கனகா பத்திரிகை நிலையம், திருநெல்வேலி, பிரபல வர்த்தக நிலையங்கள், சாவகச்சேரி. (6419)

### நாளை செவ்வாய் மாற்றம்

(31-10-93)செவ்வாய் மாற்றமும், (10-11-93) மீண்டும் கும்பராசிக்கு சனி மாற்றமும். ரூ. 10/- எங்கும் விற்பனையாகின்றது. (நூலாசிரியர் சத்யா) S. R. புஸ்பா நியூஸ் ஏஜென்சி, சங்கானைச் சந்தி. (6416)

### மிருதங்கம்

இரண்டு நாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் யாவும் சுத்தமாக சாதம் போட்டுத் தரப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (6407)

### ஆண்டு 4 வினாத்தாள்

1994 புலமைப் பரிசில் மாணவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் பி. ப. 3 மணிக்கு வெளியிடப்படும் தொடர் பரீட்சை வினாத்தாளின் 14 ஆவதுவினாத்தாள் 30-10-93 இன்று வெளியிடப்படும், வினாத்தாள் பெற்றுக் கொள்ளலாம் எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில் கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (6426)

### கலை விழா


## அநுரா பண்டாரநாயக்க கொழும்பு திரும்பினார்

அநுரா பண்டார நாயக்க நேற்றுக் காலையில் லண்டனிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவரை பிரதீப் கப்பங்மன, எம். கே. டி. எஸ். குணவர்த்தனா, ஹேம குமார நாணயக்கார, லயனல் ராஜபக்ஸா, ஜினதாஸ நியதபால, கமால் கருணா நாயக்கா, ஹலீம் இசாக் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களும், மற்றும்பலஆதரவாளர்கள், நலன் விரும்பிகளும் வரவேற்றனர்.

## பாடத்திட்டம் மாற்றப்பட்டுள்ளது

வட இலங்கை சங்கீத சபையின் பாடவிதானங்கள்அடுத்த ஆண்டு முதல் மாற்றப்பட்டிருப்பதாக சங்கீத சபையின் உத்தியோக பூர்வ தலைவர் வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். மாணவர்களின் நலன் கருதி புதிய பாடத்திட்டம் அடங்கிய நூல் கல்வித் திணைக்களத்தில் விற்பனைக்கிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### பொன்னம்பலம் விபுலானந்தன்

யாழ். மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்

அன்புக்குரியார் கரங்களில் **22- 11- 1969**

அரக்கர்கள் கரங்களில் **30- 10- 1986**

மாணவருள் திலகமாய்த் திகழ்ந்தவனே விபுலானந்தா
மானமுள்ள மறத் தமிழன் மரபினிலே உதித்தவனே
கூலிப்படை வஞ்சகத்தால் உன் உயிர் நீத்தாய்
அன்பொழுகப் பேசுவதில் உனக்கு நிகர் யாரோ
உன்னிடத்தில் நாம் கண்ட களங்கமற்ற சிரிப்பு
என்றும் எம்மைவிட்டகலா,
கல்லூரிப் படிப்பில் கவனஞ் செலுத்தியது மாத்திரமன்று
ஏனைய கல்லூரி சார் நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றினாய்
சென் ஜோன்ஸ் முதலுதவிப்படை அங்கத்தவனாய்,
மாணவத் தலைவனாய், கூடைப்பந்தாட்ட
அணித்தலைவனாய்,
லியோக் கழக அங்கத்தவனாய்; குருளைச்சாரணனாய்;
இசைக்கலை மன்றப் பொருளாளனாய்;
North Star இசைக்குழுவின் வாத்திய அங்கத்தவனாய்

## ஓராமாண்டின் நினைவாக...



### கப்டன் மதியழகன்

(நடராசா றஜீஸ்குமார்)

தமிழீழ மண்ணில் **16-7-1974**

தாய்மண் விடிவில் **9-11-1992**

திதி: ஐப்பசி பூரணை 30-10-93

பள்ளிப் படிப்பை பதினாறில் இடைநிறுத்தி
தெள்ளுத்தமிழ் மண்காக்கப் புறப்பட்ட போர்வீரா
கிளாலிக்கடல் அன்னையின் மடியில் மறைந்த
மாவீரா மதியழகா
ஆண்டொன்று கடந்ததின்று நினைக்கின்றோம்
உன் நினைவால்
உன்பிரிவால் துயருறும்

அல்வாய் கிழக்கு,
அல்வாய். (6373) குடும்பத்தினர்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி




யாழ் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம் வழங்கும்

**மூழுநிலா அறிவியலரங்கு**

இடம்:- குமாரசுவாமி மண்டபம்
காலம்:- 30-10-93 சனி [இன்று]
நேரம்:- மாலை 4.15 மணி

4.15 — 5.30 மணி

"ஆளுமை விருத்தி"
அருட்திரு. எஸ். டேமியன்
மருத்துவ பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்
(சி-7799)


## 2-ம் ஆண்டு நினைவலையில்



பிறப்பு:- 4-11-1975

வீரச்சாவு:- 30-10-1991

சிறப்புப் படைப் பிரிவைச் சேர்ந்த

### வீரவேங்கை இளங்கீரன்

(பத்மநாதன் றஜீவன்)

(தையிட்டி)

ஆனையிறவு இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத்தழுவிக் கொண்டார்.

கருவினிலே புலியாகி காவியத்தின் நாயகனாய்
கலங்காத துணிவுடனே களமாடிக் கதையானாய்
கல்லறையில் துயில் கொள்ளும் மாவீரா!
கருவாகி ஒரு நூறு புலியாவீர்.
கனவிதல்ல நிஜமாக நீங்கள் இங்குபிறந்திடுவீர்
கருவெல்லாம் புலியாகி களத்தினிலே குதித்திடுமே
கல்லறைக்குள் வித்தான வீரரெல்லாம் புலியாகி
தவழ்ந்திடுவீர் தமிழ் ஈழம் தனிலே

''ஜெயந்தம்'' அப்பா, அம்மா, தம்பிமார்
தாவடிதெற்கு. (6413) மாமா, மாமி, பிள்ளைகள்

## நினைவு கூருகின்றோம்...

விஜயகுமார், 192|1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (6407)

## ஆண்டு 4 வினாத்தாள்

1994 புலமைப் பரிசில் மாணவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் பி. ப. 3 மணிக்கு வெளியிடப்படும் தொடர் பரீட்சை வினாத்தாளின் 14 ஆவதுவினாத்தாள் 30-10-93 இன்று வெளியிடப்படும், வினாத்தாள் பெற்றுக் கொள்ளலாம் எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில் கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (6426)

## கலை விழா

உரும்பராய் இந்துக் கல்லூரியின் அபிவிருத்தி நிதிக்கான கலை விழா இன்று மாலை ஆறு மணியளவில் கல்லூரி அரங்கில் அதிபர் சி. பாலசுப்பிரமணியம்தலைமையில் நடைபெறவுள்ளது. வைத்திய கலாநிதி பொ. சிவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இந் நிகழ்ச்சியில் ''சிந்து கானம்'' இன்னிசை நாட்டியம் என்பவற்றுடன், கறை படிந்த நாட்கள் மற்றும் கோடை நாடகமும் மேடையேற்றப் படவுள்ளது.

---

செல்வன்

## பொன்னம்பலம் விபுலானந்தன்

*யாழ். மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்*

*அன்புக்குரியார் கரங்களில்* **22- 11- 1969** | *அரக்கர்கள் கரங்களில்* **30- 10- 1986**

மாணவருள் திலகமாய்த் திகழ்ந்தவனே விபுலானந்தா
மானமுள்ள மறத் தமிழன் மரபினிலே உதித்தவனே
கூலிப்படை வஞ்சகத்தால் உன் உயிர் நீத்தாய்
அன்பொழுகப் பேசுவதில் உனக்கு நிகர் யாரோ
உன்னிடத்தில் நாம் கண்ட களங்கமற்ற சிரிப்பு
என்றும் எம்மைவிட்டகலா,
கல்லூரிப் படிப்பில் கவனஞ் செலுத்தியது மாத்திரமன்று
ஏனைய கல்லூரி சார் நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றினாய்
சென் ஜோன்ஸ் முதலுதவிப்படை அங்கத்தவனாய்,
மாணவத் தலைவனாய், கூடைப்பந்தாட்ட
அணித்தலைவனாய்,
லியோக் கழக அங்கத்தவனாய்; குருளைச்சாரணனாய்;
இசைக்கலை மன்றப் பொருளாளனாய்;
North Star இசைக்குழுவின் வாத்திய அங்கத்தவனாய்
என்றெல்லாம் கடமை செய்து வந்தாய்.
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை 'மாணவ மாமணி' என்ற
பட்டத்தினைப் உனக்களித்தார்.
உன் சக உதிரங்களின் உயிர்காக்க முனைந்த வேளை
உன் உயிர் கொடுத்து உயர்ந்து விட்டாய்!

ஆண்டுகள் ஏழு சென்றாலும் எங்கள் உடலில் உணர்வுகள் இருக்கும் வரை உனது பிரிவுத்துயர் எங்கள் உள்ளங்களில் மாறாத் துயராய் மனதில் ஊறிவரும்.

64, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்.
(6409)

பெற்றோர்,
சகோதரர்கள், சகோதரி,
மைத்துனிமார்.

---

## 2-ம் ஆண்டு நினைவாக ...

திருமதி

## திலகவதி லோகநாதன்

அவர்களின்

**மலர்வு:** 16- 10- 1958 | **உதிர்வு:** 23- 10- 1991



அன்புடனே அழைத்திடுவாய்
அரவணைத்துப் பேசிடுவாய்
ஆண்டவனைத் தொழுதிருந்தாய்
ஆசிபெற்றே வாழ்ந்திருந்தாய்
இல்லையென்றுரைப்பவர்க்கு
இருப்பதிலே கொடுத்திடுவாய்
ஈவதென்றால் பெருமகிழ்ச்சி
ஈற்றினிலும் ஈந்திடுவாய்
உண்டு களித்த நீ
உறங்கமனை அடியிட்டாய்
ஊரிலுள்ளோர் கதறி அழ
ஊரை விட்டு ஊர்ந்து சென்றாய்
எட்டுதிக்கு மக்களையும்
எட்டும் வரை ஆதரித்தாய்
ஏடெடுத்துப் படித்ததனால்
ஏறெடுத்துப் பார்க்க மாட்டாய்
ஐயனையே கரம் பிடித்து
ஐயமின்றி வாழ்ந்திருந்தாய்
ஒரு கொடியில் மலர்ந்திருந்தாய்
ஒரு நொடியில் உதிர்ந்து விட்டாய்
ஓய்வின்றி உழைத்திருந்தாய்
ஓய்வெடுக்கச் சென்றுவிட்டாய்
ஔடதத்தை வேண்டி நின்றாய்
அவ்விடத்தே உயிர் நீத்தாய்
எம்மை விட்டுப் பிரிந்தின்று
இரண்டாண்டு சென்றாலும்
எம்மிரண்டு கண்களின்றும்
கண்ணீர் சொரிகின்றன.

மலையந் தோட்டம்,
கொற்றாவத்தை.
30. 10. 1993

கணவன்: லோகநாதன்
பிள்ளைகள்: கௌசல்யா, சுமன், சுமணன், சுகர்ணன்
(6417)

---

## கப்டன் மதியழகன்

(நடராசா றஜீஸ்குமார்)

**தமிழீழ மண்ணில்** 16-7-1974 | **தாய்மண் விடிவில்** 9-11-1992

**திதி: ஐப்பசி பூரணை 30-10-93**

பள்ளிப் படிப்பை பதினாறில் இடைநிறுத்தி
தென்தமிழ் மண்காக்கப் புறப்பட்ட போர்வீரா
கிளாலிக்கடல் அன்னையின் மடியில் மறைந்த
மாவீரா மதியழகா
ஆண்டொன்று கடந்ததின்று நினைக்கின்றோம்
உன் நினைவால்
உன்பிரிவால் துயருறும்


அல்வாய் கிழக்கு,
அல்வாய். (6373)

குடும்பத்தினர்

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 17-07-1937



விண்ணில்: 09-11-1992

அமரர்

## திரு. தங்கராசா சிவலிங்கம்

(முன்னாள் முகாமையாளர், மக்கள் வங்கி, பருத்தித்துறை)

திதி:- 30-10-1993

குடும்பத்திற்கோர் குலவிளக்காய் கொற்றவனாய்
குவலயம் போற்ற நீர் வாழ்ந்தீரே
உற்றோர்க்கும் மற்றோர்க்கும்
உதவி பல புரிந்த உத்தமரே
எங்கே எம்மை விட்டு சென்றனையோ
ஓராண்டு ஓடிச் சென்றதுவே
தலைவன் இல்லா மனையாங்கே.மங்காத மணிவிளக்கே
மீண்டும் உம்மைக் காண்பதெப்போ
நெஞ்சு துடிக்குதப்பா, நினைவு தடுமாறுதப்பா
காப்பாய் என்றிருந்தோம், கனவாகிப் போச்சே.

குறிப்பு:- இன்று அமரரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உங்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

''சிவமதி''
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
(6400)

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்.

---

(பத்மநாதன் றஜீவன்)

(தையிட்டி)

ஆனையிறவு இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத்தழுவிக் கொண்டார்.

கருவினிலே புலியாகி காவியத்தின் நாயகனாய்
கலங்காத துணிவுடனே களமாடிக் கதையானாய்
கல்லறையில் துயில் கொள்ளும் மாவீரா!
கருவாகி ஒரு நூறு புலியாவீர்.
கனவிதல்ல நிஜமாக நீங்கள் இங்குபிறந்திடுவீர்
கருவெல்லாம் புலியாகி களத்தினிலே குதித்திடுமே
கல்லறைக்குள் வித்தான வீரரெல்லாம் புலியாகி
தவழ்ந்திடுவீர் தமிழ் ஈழம் தனிலே

''ஜெயந்தம்''
தாவடிதெற்கு. (6413)

அப்பா, அம்மா, தம்பிமார்
மாமா, மாமி, பிள்ளைகள்

---

## நினைவு கூருகின்றோம்...
## 1993- 10- 30

1986ஆம் ஆண்டு யாழ் - காரைநகர்ப் பகுதியில் சிறிலங்காக் கடற்படையினருக்கு எதிரான நடவடிக்கையின்போது வீரச்சாவெய்திய -

**சுலோஜன்** (சித்திரவேலாயுதம் கோபிதரன் - திருமலை)

**பிறின்ஸ்லி** [அந்தோனிப்பிள்ளை சகாயதாஸ் - எமில் நகர் - மன்னார்]

கோட்டை முகாமிலிருந்து மத்திய கல்லூரியை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான அக்கல்லூரி உயர்வகுப்பு மாணவன்.

1987ஆம் ஆண்டு யாழ் - கோப்பாயில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**நிசார்** (இந்திரலிங்கம் உதயரஞ்சன் - முருகையன் கோயில் ஒழுங்கை - வல்வெட்டித்துறை)

1988ஆம் ஆண்டு ஆனையிறவு தட்டுவன்கொட்டிப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் கனோஜி அம்மான்** (கிருஷ்ணபிள்ளை சிவராசா- கம்பர்மலை - வல்வெட்டித்துறை)

கிளி - பரந்தனில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய -

**2-ம லெப் விமல்** [செல்லத்தம்பி சிவசுப்பிரமணியம் - ஓமந்தை - வவுனியா]

அச்சுவேலி - தோப்புப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**மதன்** [கமலநாதன் ரவீந்திரநாதன் - நவக்கிரி, புத்தூர்- யாழ்]

கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் பாம்பு கடித்து எமைப் பிரிந்த -

**செல்வா** (வேல்நாயகம் வசந்தராசா - பாண்டிருப்பு - அம்பாறை)

உமையாள்புரம் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**அறிவழகன்** (—— —— குமரபுரம் - பரந்தன்)

1991ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் போது வீரச்சாவெய்திய -

**இளங்கீரன்** (பத்மநாதன் ரஜீவன் - தையிட்டி, காங்கேசன்துறை - யாழ்)

1992ஆம் ஆண்டு இதேதினம் யாழ்ப்பாணத்தில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த -

**இராமு** (முருகையா இராமகிருஷ்ணன் - கைதடி வடக்கு- யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7804)

சிந்தனைக்கு

உன்னால் கடிக்க முடியாவிட்டால் பல்லைக் காட்டுவதால் பயனில்லை.
— ஸ்பானியப் பழமொழி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05


## தொண்டா கூறியதில் தவறென்ன?

அமைச்சர் தொண்டமானுக்கு ஆளும் ஐக்கிய தேசிய கட்சி வட்டாரத்தில் எழுந்துள்ள கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து அவர் பதவி விலகக் கூடும் என்ற ஊகங்கள் எழுந்துள்ளன. இவ்வூகங்கள் சிலவேளைகளில் ஊகங்களாகவே மறைந்து போகலாம். சிலவேளை நிஜமாகவும் மாறலாம். ஆனால், அமைச்சர் தொண்டமானுக்கு தற்பொழுது அதாவது, டி. பி. விஜேதுங்கா பதவி ஏற்ற பின்னர், முன்னர்போல் அமைச்சரவையில் செல்வாக்கோ முக்கியத்துவமோ இல்லை என்பதும், ஐ. தே. க. வட்டாரங்களில் இருந்து அவர் பலத்த எதிர்ப்பையும், விமர்சனத்தையும் எதிர்நோக்குகின்றார் என்பதும் உண்மையே.

இந்நிலையில், அமைச்சர் தொண்டமான் அண்மையில் லண்டன் சென்றிருந்தபோது 'தமிழ்நேஷன்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ள கருத்துக்கள் மேலும் நெருக்கடியையும், விமர்சனத்தையும் அதிகரித்துள்ளன. ஆனால், இப்பேட்டியில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ள கருத்துக்கள் சிங்களப் பேரினவாதம் தமிழருக்குத் தொடர்ச்சியாக இழைத்துவரும் கெடுதலின் காரணமாக உருவானவையா? அன்றி ஏற்கனவே அமைச்சரவையில் எழுந்துள்ள நெருக்கடியின் விளைவாக எழுந்தவையா? என்பதைத் தெளிவாகக் கூறமுடியாது விட்டாலும் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களில் தவறு எதுவும் இருப்பதில்லை.

அமைச்சர் தொண்டமான் கூறிய கருத்துக்களில், ''சிங்கள அரசாங்கங்கள் அனைத்தும் ஒன்றுதான், ஜெயவர்த்தனா, பண்டாரநாயக்கா, பிரேமதாசா மற்றும் ஏனையவர்களுக்கிடையே எந்த வித்தியாசமும் இல்லை. ஒவ்வொரு சிங்களத் தலைவரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தாம் அக்கறையாக இருப்பதாகச் சொல்வார்கள். ஆனால், ஒருபோதும் இனப்பிரச்சினையை தீர்க்க அவர்கள் விரும்ப மாட்டார்கள்'' என்பது முக்கியமான தொன்றாகும். இதுவே இன்று சிங்கள அரசியல்வாதிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ள கருத்துமாகும்.

ஆனால், அமைச்சர் தொண்டமான் கூறியதில் தவறு என்ன உள்ளது? அவர் தனது கருத்தினை கற்பனையின் அடிப்படையில் கூறவில்லையே. கடந்த கால

## அநுராவுக்கு தகுந்த தண்டனை மக்கள் வழங்கவேண்டும்

### சிறிமாவோ கோரிக்கை

(கொழும்பு)
அநுரா பண்டாரநாயக்காவின் தற்போதைய முடிவுக்கு உரிய தண்டனையை மக்கள் வழங்க வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியிலிருந்து யார் விலகினாலும் மக்கள் அதற்குத் தகுந்த தீர்ப்புக் கூறுவர். அநுராவை கட்சியிலிருந்து நீக்க யாரும் சதி செய்யவில்லை. கட்சி உறுப்பினர் பதவியை விட்டு நீங்கியமைக்கும் அவரின் தற்போதைய நிலைமைக்கும் அவரே பொறுப்பு. சிறிலங்கா சுதந்திரக்கட்சி அல்ல என்றும் சிறிமாவோ மேலும் தெரிவித்தார்.

### இடப்பெயர்ந்த பாடசாலைகளுக்கு

## தற்காலிக கொட்டகைகள் அமைக்க நடவடிக்கை

(நல்லூர்)
இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ்ப்பாணப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுப்பதற்கு யாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யா/சின்னமடு றோ. க. த. க. பாடசாலைக்கும், மண்டைதீவு றோ. க. த. க. பாடசாலைக்கும் இவ்வகையில் கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன.

அத்துடன், இங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்குத் தேவையான தளபாடங்கள் பற்றிய விபரங்களையும் உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்து கடிதங்களை இவ்விரு பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். [17]

## சைக்கிள் மீதான சுங்க தீர்வை மீண்டும் 10சதவீதம் அதிகரிப்பு

(கொழும்பு)
சைக்கிள்களுக்கான சுங்கத் தீர்வை மீண்டும் பத்து சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. ஜூன் மாதம் முதல் சைக்கிள் மீதான சுங்கத் தீர்வை 35 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. ஆனால் உள்ளூரில் இணைக்கப்படும் சைக்கிள்களின் விற்பனை பாதிக்கப்பட்டதால் இந்த மாதம் முதல் மீண்டும் சுங்கத் தீர்வை பத்து சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக சுங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

## பிரிட்டன் தூதுவர் மட்டக்களப்புக்கு விஜயம்?

கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதுவர் அடுத்த மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் மட்டக்களப்பு பகுதிகளுக்கு விஜயம் செய்வதற்கு திட்டமிட்டுள்ளார்.

மட்டக்களபபு செல்லும் இவர் அரச அதிகாரிகள் பலரையும் பல்வேறு சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாட இருப்பதாகவும்; அங்குள்ள மக்களின் தற்போதைய நிலை குறித்து கேட்டறிய இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## 4000 பனம் விதை நாட்ட ப.தெ.வள அபிவிருத்திச்சங்கம் முடிவு

இந்த ஆண்டில் நாலாயிரம் பனை விதைகளை நாட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளது. இத் தீர்மானத்தின் அடிப்படையில் கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் உள்ள விவசாயத்திற்கு பயன்படாத தரிசு நிலங்களில் சங்கத்திற்கு சொந்தமான கிளை நிலையங்களை அண்டிய பகுதிகளிலும் ...

ஆண்டிற்கான பனம் விதை நாட்டல் கடந்த திங்களன்று காலையில் கோண்டாவிலில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

### கருத்தரங்கு

அகில இலங்கை சர்வமத யோகாசன சங்கத்தினரால் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3. 30 மணிக்கு திவ்விய ஜீவன சங்க மண்டபத்...

## புதிய பிரச்சினைகளை எதிர்கொள்ள தொழிற்சங்கம் தயாராக வேண்டும்

### அமைச்சர் தொண்டமான்

[கொழும்பு]
தொழிலாளர்கள் இன்று முகம் கொடுக்க வேண்டியுள்ள நெருக்கடிகளை எதிர்கொள்ளும் வகையில் தொழிற்சங்கங்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு இ. தொ. கா. தலைவரும், சுற்றுலா மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சருமான எஸ். தொண்டமான் கூறியுள்ளார்

தொழிலாளர் கல்வி உதவி என்னும் தலையங்கத்தின் கீழ் அண்மையில் கொழும்பு ஹோட்டல் ரேணுகாவில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில், ஒவ்வொரு தொழிற்சங்கவாதியும் தினம்தோறும் ஒவ்வொரு புது அனுபவங்கள் மூலம் புதுப்புதுப் பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம் ஒன்றைப் படித்து விட்டால் எல்லாம் தெரிந்து விட்டது என்று அர்த்தமாகாது நாள்தோறும் கற்க நிறைய இருக்கிறது. அவ்வாறான அனுபவங்களை அறிவை தொழிலாளர் நலனுக்காக சேவை மனப்பான்மையுடன் பயன்படுத்த வேண்டும்.

தொழிலாளர்கள் முன்பு அரசின் கீழ் ஊழியர்களாக இருந்தனர். இப்போது தனியார் நிர்வாகத்தின் கீழ் ஊழியர்களாக உள்ளார்கள். அன்று முகம் கொடுத்த பிரச்சினைகள் வேறு. இன்று முகம் கொடுக்கும் பிரச்சினைகள் வேறு.

ஆகவே, புதுப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் விதத்தில் தொழிற்சங்கவாதிகள் அறிவையும், அனுபவத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

### நவம்பர் 3 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் ஒக்ரோபர் மாதம் 6-ம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்து ஒத்தி வைக்கப்பட்ட 'முகாமைத்துவம் தொடர்பான உயர் தர தேசிய சான்றிதழ் பயிற்சி நெறி' நவம்பர் மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மேற்படி கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (22)

### மாதாந்த சொற்பொழிவு

சிவகுருநாத குரு பீடத்தின் வேதாந்த மடப் பரிபாலன சபை ஒவ்வொரு பூரணை தினத்தன்றும் நடத்தும் சொற்பொழிவுகளின் வரிசையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் ''சரித்திரமும் தத்துவமும்'' என்னும் பொருள்...

## அமைச்சர் சந்திரா ரணதுங்க தொண்டா மீது சாடல்

(கொழும்பு)
தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை தீவிரவாதப் போக்குடைய சிறு தொகையான தமிழர்களே ஆதரிக்கின்றனர். அமைச்சர் தொண்டமானும், சில தமிழ்க்கட்சிகளும், குழுக்களும் இந்தக் கோட்பாட்டை ஏன் ஆதரிக்கின்றார்கள் என்பது தான் புரியவில்லைஎன்று நிர்மாணத் துறை இராஜாங்க அமைச்சர் சந்திரா ரணதுங்க சென்ற வாரத்தில் பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறுகையில், இந்த அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தொண்டமான் அண்மையில் லண்டன் சென்றிருந்த போது செய்திப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியைக் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டே அதை தாக்கிப் பேசி வருவது கண்டுதான் அதிர்ச்சி ஏற்பட்டது.

13-16 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் வடபகுதியில் குடாநாட்டில் தமிழ் இராச்சியம் இருந்தது உண்மையே. இதை சரித்திர சான்றுகள் கூறுகின்றன. ஆனால் இந்த இராச்சியம் இடைக்கிடை சிங்கள மன்னர்களால் வெற்றி கொள்ளப்பட்டது என்பதும், வடக்கின் தமிழ் இராச்சியம் கிழக்கின் கணிசமான ஒரு பகுதியை உள்ளடக்கியதாக இருந்ததில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது எனவும் அமைச்சர் சந்திரா ரணதுங்க தெரிவித்தார்.

## அனுமதி அட்டைகள் இன்னும் யாழ்ப்பாணம் அனுப்பப்படவில்லை

### -காப்புறுதி கம்பெனி அட்டை

(கொழும்பு)
இலங்கை காப்புறுதிக் கம்பெனியில் வேலை வாய்ப்பு அளிப்பதற்காக காப்புறுதிக் கம்பெனி ஊழியர்களின் பிள்ளைகள் மத்தியில் நடத்தப்பட்ட பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தை சேர்ந்த சுமார் முப்பதுபேர் தோற்ற முடியாத நிலைமை தோன்றியது.

தற்போது கொழும்பில் தங்கி இருக்கும் காப்புறுதிக் கம்பனி ஊழியர் ஒருவர் இது பற்றிக் கூறுகையில், முந்நூறுக்கும் அதிகமானோர் தோற்றும் இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு அனுப்பப்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

## மருந்தகப் பயிற்சியாளர்கள் விண்ணப்பம் கோரல்

மருந்தகம் சம்பந்தமான பாடநெறியில் டிப்ளோமா கற்கைநெறியை மேற்கொள்ள விரும்புவோரிடமிருந்து கொழும்பு பல்கலைக்கழகம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. க. பொ. த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில்சித்திபெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம் எனவும், இரசாயனவியல், பௌதீகவியல் பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் ...

... துடன் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் ஐந்துபாடங்களில் திறமைசித்தி பெற்றவர்கள் மருந்து விற்பனையில் ஐந்து வருட அனுபவத்துடன் விண்ணப்பிக்கலாம் எனவும், விண்ணப்பிக்க விரும்புவோர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், மருத்துவபீடம்' கின்ஸிறோட் கொழும்பு 8 என்ற முகவரியோடு தொடர்பு கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவு நவம்பர் 29

டமான் தெரிவித்துள்ள கருத்துக்கள் ... வாதம் தமிழருக்குத் தொடர்ச்சியாக இழைத்துவரும் கெடுதலின் காரணமாக உருவானவையா? அன்றி ஏற்கனவே அமைச்சரவையில் எழுந்துள்ள நெருக்கடியின் விளைவாக எழுந்தவையா? என்பதைத் தெளிவாகக் கூறமுடியாது விட்டாலும் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களில் தவறு எதுவும் இருப்பதில்லை.

அமைச்சர் தொண்டமான் கூறிய கருத்துக்களில், ''சிங்கள அரசாங்கங்கள் அனைத்தும் ஒன்றுதான், ஜெயவர்த்தனா, பண்டாரநாயக்கா, பிரேமதாசா மற்றும் ஏனையவர்களுக்கிடையே எந்த வித்தியாசமும் இல்லை. ஒவ்வொரு சிங்களத் தலைவரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தாம் அக்கறையாக இருப்பதாகச் சொல்வார்கள். ஆனால், ஒருபோதும் இனப்பிரச்சினையை தீர்க்க அவர்கள் விரும்ப மாட்டார்கள்'' என்பது முக்கியமானதொன்றாகும். இதுவே இன்று சிங்கள அரசியல்வாதிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ள கருத்துமாகும்.

ஆனால், அமைச்சர் தொண்டமான் கூறியதில் தவறு என்ன உள்ளது? அவர் தனது கருத்தினை கற்பனையின் அடிப்படையில் கூறவில்லையே. கடந்த கால அனுபவத்தின் மூலமாகவும், நிகழ்கால நடைமுறையில் உணர்ந்து கொண்டதன் மூலமாகவுமே இதைத் தெரிவித்துள்ளார். தொண்டமான் குறிப்பிட்ட சிங்களத் தலைவர்களில் யார் உளப்பூர்வமாக இனப்பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டார்கள்?

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும் என தமிழ் அரசியல் வாதிகள் கோரியபோது, ஜே. ஆர். ஜெயவர்த்தனா ''போர் என்றால் போர். சமாதானம் என்றால் சமாதானம்'' எனப் போர்ப் பிரகடனம் செய்தார். அரசியற் பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றை காண விழையாது தமிழர் மீது இராணுவத்தை ஏவி விட்டார். அரச பயங்கரவாதத்தைச் சட்டத்தின் மூலம் அங்கீகரித்தார். சிங்கள இராணுவத்தால் இயலாது என்ற நிலையில், இந்திய இராணுவத்தையும் வரவழைத்தார்.

''இருமொழி ஒரு நாடு, ஒருமொழி இரு நாடு'' என்ற எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது தனிச் சிங்கள மசோதாவைக் கொண்டு வந்தவர்தான் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா. அவரது மனைவி சிறீமாவோ பண்டாரநாயக்காவோ, அரசியல் அமைப்பு மாற்றத்தின் மூலம், சிறுபான்மையினருக்கு அரசியல் யாப்பு ரீதியாகக் கொடுக்கப்பட்டிருந்த பாதுகாப்பை இல்லாது ஒழித்தவர்.

பிரேமதாசா கொடிய போரை தமிழருக்கு எதிராக நடத்தி ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களின் மரணத்திற்குக் காரணமாக இருந்தவர். இதேவேளை தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவோ முன்னைய சகல தலைவர்களையும் மிஞ்சும்வகையில் இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை எனச் சாதிப்பதன் மூலம், முன்னைய சிங்களத் தலைவர்கள் அனைவரையும் மடையர்கள் ஆக்கியுள்ளார்.

இவ்வாறான பேரினவாதத் தலைவர்கள் பற்றி அமைச்சர் தொண்டமான் கூறியதில் தவறு என்னவுள்ளது. மேலும், தமிழரின் உரிமைகளை வழங்குவதற்குச் சிங்கள மக்கள் விரும்பவில்லை என அரசியற் தலைவர்கள் கூறுவது பெரிய பொய் என்று அவர் கூறுவதிலும் தப்பென்ன உள்ளது.

இந்நிலையில், அமைச்சர் தொண்டமான் கூறியதை உண்மைக்குப் புறம்பானது எனவும், அமைச்சரவை கூட்டுப் பொறுப்பிற்கு விரோதமானது எனவும் தெரிவிப்பது சிங்களப் பேரினவாதத்தின் வெளிப்பாடே ஆகும். அதாவது, தமிழரின் உரிமை பற்றி யார் கதைப்பினும் அது அவர்களுக்கு வெறுப்பூட்டுவதானதாகவே இருக்கும். அது அவர்களுக்கு ஜீரணித்துக் கொள்ளக்கூடியதும் அல்ல.

## மட்டக்களப்புக்கு விஜயம்?

கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதுவர் அடுத்த மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் மட்டக்களப்பு பகுதிகளுக்கு விஜயம் செய்வதற்கு திட்டமிட்டுள்ளார்.

மட்டக்களபபு செல்லும் இவர் அரச அதிகாரிகள் பலரையும் பல்வேறு சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாட இருப்பதாகவும்; அங்குள்ள மக்களின் தற்போதைய நிலை குறித்து கேட்டறிய இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## 4000 பனம் விதை நாட்ட ப.தெ.வளஅபிவிருத்திச்சங்கம்முடிவு

இந்த ஆண்டில் நாலாயிரம் பனை விதைகளை நாட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளது. இத் தீர்மானத்தின் அடிப்படையில் கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் உள்ள விவசாயத்திற்கு பயன்படாத தரிசு நிலங்களில் சங்கத்திற்கு சொந்தமான கிளை நிலையங்களை அண்டிய பகுதிகளிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பனம் விதைகள் ஏற்கனவே நாட்டப்பட்டும்உள்ளன. இந்த ஆண்டிற்கான பனம் விதை நாட்டல் கடந்த திங்களன்று காலையில் கோண்டாவிலில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

### கருத்தரங்கு

அகில இலங்கை சர்வமத யோகாசன சங்கத்தினரால் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் யோகாசன கருத்தரங்கு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் ஒக்ரோபர் மாதம் 6-ம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்து ஒத்திவைக்கப்பட்ட 'முகாமைத்துவம் தொடர்பான உயர் தர தேசிய சான்றிதழ் பயிற்சி நெறி' நவம்பர் மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மேற்படி கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (22)

### மாதாந்த சொற்பொழிவு

சிவகுருநாத குரு பீடத்தின் வேதாந்த மடப் பரிபாலன சபை ஒவ்வொரு பூரணை தினத்தன்றும் நடத்தும் சொற்பொழிவுகளின் வரிசையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் ''சரித்திரமும் தத்துவமும்'' என்னும் பொருள் பற்றி எம். ஜெயராமசர்மா உரை நிகழ்த்தவுள்ளார்.

அளிப்பதற்காக காப்புறுதிக் கம்பெனி ஊழியர்களின் பிள்ளைகள் மத்தியில் நடத்தப்பட்ட பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தை சேர்ந்த சுமார் முப்பதுபேர் தோற்ற முடியாத நிலைமை தோன்றியது.

...றுக்கும் அதிகமானோர் தோற்றும் இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு அனுப்பப்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

## மருந்தகப் பயிற்சியாளர்கள் விண்ணப்பம் கோரல்

மருந்தகம் சம்பந்தமான பாடநெறியில் டிப்ளோமா கற்கைநெறியை மேற்கொள்ள விரும்புவோரிடமிருந்து கொழும்பு பல்கலைக்கழகம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. க. பொ. த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில்சித்திபெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம் எனவும், இரசாயனவியல், பௌதீகவியல் பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் ஐந்துபாடங்களில் திறமைசித்தி பெற்றவர்கள் மருந்து விற்பனையில் ஐந்து வருட அனுபவத்துடன் விண்ணப்பிக்கலாம் எனவும், விண்ணப்பிக்க விரும்புவோர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், மருத்துவபீடம்' கின்ஸிறோட் கொழும்பு 8 என்ற முகவரியோடு தொடர்பு கொள்ளும் படியும் கேட்கப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவு நவம்பர் 29 ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹர்சத்பால் மசூதியினுள்

## தீவிரவாதிகளுடன் வெளிநாட்டவர் இராணுவ அதிகாரி தகவல்

(டில்லி)

சிறீநகரின் ஹர்சத் பால் தர்கா மசூதியில் இருக்கும் தீவிரவாதிகளுடன் பாகிஸ்தானியர் இருவரும், ஆப்கானியர் ஐவரும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த மசூதியினுள் சுமார் 75 பேர் இருப்பதாகவும் இவர்களில் 60 பேர் வரையில் தீவிரவாதிகள் என்றும் கூறப்படுகிறது.

பிரிகேடியர் எஸ் பி. எஸ். கன்வர் இதுபற்றி மேலும் கூறுகையில், இங்கு அடைக்கலம் புகுந்துள்ள தீவிரவாதிகளிடம் ஒரு இயந்திரத் துப்பாக்கி, இரண்டு பிஸ்டல்கள், எட்டு முதல் பத்து வரையிலான ஏ. கே. ரகத் துப்பாக்கிகளும் இருக்கலாம் என்று தெரிய வருகிறது என்றார்.

இதனிடையே உச்ச நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்புக்கு இணங்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உறுப்பினர்கள் சிலர் மசூதிக்குள் சென்று மருத்துவ மற்றும் அங்குள்ளோரின் உடல்நிலை குறித்து கவனம் செலுத்தவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேலதிக தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் வழங்குவதற்கு எதிர்ப்பு

- டி. என். சேஷன் மனுதாக்கல்

(புதுடில்லி)

புதிதாக நியமிக்கப்பட்ட இரண்டு தேர்தல் ஆணையாளர்களுக்கும்தலைமை தேர்தல் ஆணையாளருக்கு இணையான அதிகாரம் வழங்கப்படும் வகையில் கொண்டுவரப்பட்ட அவசர சட்டத்தை எதிர்த்து தலைமை தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் உச்சநீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவின் மீதான விசாரணையை உச்சநீதிமன்றம் அடுத்த மாதம் 15-ம் திகதியன்று நடத்தவுள்ளது. தலைமை நீதிபதி எம். என். வெங்கடாசெல்லையா மற்றும் நீதிபதி மோகனன் அடங்கிய டிவிசன் பெஞ்ச் இத் திகதியை நிர்ணயித்துள்ளது.

## மத்தியஸ்தர் பரீட்சை

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தில் புதிதாக அங்கத்துவம் பெறுவதற்கான மத்தியஸ்தர் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பரீட்சையில் தோற்ற விரும்புவோர் நாளை காலை யாழ். இந்துக் கல்லூரிக்கு சமுகம் தருமாறு சங்கச் செயலாளர் கேட்டுக் கொள்கிறார்.

## ஆட்டோவில் வந்தவர் மீது வழிமறித்து தாக்குதல்

(நமது நிருபர்)

புத்தூர்சந்தியில்வைத்துபலரால் தாக்கப்பட்டதாக கூறப்படும் பொன்னுத்துரை குணசேகரம் (வயது 38) என்பவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனாமருத்துவமனை அவசர நோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் நேற்று முன்தினம் இரவு தனது மோட்டார் சைக்கிளை விற்றுவிட்டு பணத்துடன் ஆட்டோவில் வந்ததாகவும் வரும் வழியில் சிலர் நிற்பதைக் கண்டு ஆட்டோவை நிற்பாட்டி இறங்கிய போது பலமாக தாக்கப்பட்டதாகவும் இவரது உறவினரில் ஒருவர் தெரிவித்தார். அதேவேளை மோட்டார்சைக்கிள் விற்று அவர் கொண்டு வந்த பணமும் காணாமல் போய் விட்டதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

## மக்கள் வங்கி கிளை வெற்றிடம் நிரப்ப முயற்சி

(அலுவலக நிருபர்)

வடக்கிலுள்ள மக்கள் வங்கி கிளைகளில் நிலவும் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளன.

தற்போது நிலவும் வெற்றிடங்களுக்கு 31 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளன. இதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களாகவும் க. பொ. த. சாதாரணதர பரீட்சையில் ஆங்கிலம், கணிதம் ஆகியவற்றில் திறமைச்சித்தியுட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச,நி)

## சென்ற ஆண்டின் திரைப்பட விருது தமிழக அரசு அறிவிப்பு

(சென்னை)

1992ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் திரைப்படத் தெரிவில்ஆறு பரிசுகளை ரோஜா திரைப்படம் பெற்றுள்ளது. இத்திரைப்படத்தின் இயக்குநர் மணி ரத்னம் சிறந்த இயக்குநராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். சிறந்த இசையமைப்பாளராக ஏ. ஆர். ரகுமானும், சிறந்த நடிகர் விருது தேவர் மகன் படத்தில் நடித்தமைக்காக கமலஹாசனும், சிறந்த நடிகைக்கான விருது சின்னக் கவுண்டர் படத்தில் நடித்தமைக்காக சுகன்யாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### துப்பாக்கிச்

பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உலங்கு வானூர்தியொன்றும் நேற்றுப் பகல் வேளையில் வலி வடக்குப் பகுதிகளை பல தடவை வட்டமிட்டுச் சென்றது. (09)

### ஆசிரியர்

பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கத்திற்கு கல்வி அமைச்சு யாழ். அரச அதிபர் ஊடாக அவசர செய்திஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (ச) (நி)

### பாலஸ்தீனியர் விடுதலையவர்

சிறை வைக்கப்பட்டிருக்கும் பத்தாயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனியர்களை விடுவிக்க இஸ்ரேல் நிர்வாகம் இணக்கம் தெரிவித்திருப்பதாக பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### அரசின்

பொருளாதார நெருக்கடிக்கு இவர்கள் இலக்காகியுள்ளனர். தன்னாட்சி, அதிகாரபகிர்வு, சிறுபான்மை உரிமைக்கு பாதுகாப்பு எனபலவற்றை உள்ளடக்கிய சமஷ்டியை அவர் தனது கட்டுரையில் இறுதியில் பிரச்சினைக்கு தீர்வாக குறிப்பிட்டுள்ளார்.

### வீரச்சாவு

சல்லி, சாம்பல்தீவு, திருக்கோணமலை), வீரவேங்கை பெரியதம்பி (மாணிக்கராசா குலேந்திரராசா, பள்ளிக்குடியிருப்பு மூதூர்) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**தடை எல்லாம் உடைத்திடலாம்**
**தருசு நிலமெல்லாம் பயிர்செய்தால்**

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

கனகரத்தினம் தனபாலசிங்கம்

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் யோகாசன ஆசிரியரும், மன்ற இசையாசிரியை திருமதி அன்னலட்சுமி தனபாலசிங்கத்தின் கணவருமாகிய கனகரத்தினம் தனபாலசிங்கம் அவர்களின் திடீர் மறைவின் 31-ம் நாளாகிய இன்று 30-10 93 அவரின் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றது.

திருமறைக் கலாமன்றம்
யாழ்ப்பாணம்.

(சி-7901)

## 10-ம் நாள் நினைவில்...



## வீரவேங்கை இசையாளன்

[மனுவேல் ஜெந்திரன்]
[தொடர் மாடி அருகாமை, குருநகர்]

பிறப்பு 10. 01. 1977 — வீரச்சாவு 21. 10. 1993

இசையாளனே,
இனிய தோழனே
இதயம் விம்மி அழுகின்றோம்
இறுதி வரையில் – உன்
இலட்சிய தாகத்துடன் எழுவோம்
ஈழத்தின் எல்லைகளை மீட்போம்
இது உறுதி

(சி-7805) போராளி நண்பர்கள்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



---

இன்று

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
யா / திருக்குடும்பக் கன்னியர் மட இன்ரறக்ட்கழகம்
ராகமாலிகா இசைக் குழுவினரின்
ஆதரவுடன் வழங்கும்

## இன்னிசை கானம்

நேரம்: மு. ப. 9.00, பி.ப 2.00
இடம்: யா/புனித பத்திரிசியார் கல்லூரி
அன்பளிப்பு - 10/-, 5/-, 20/-

குறிப்பு:- நுழைவுச்சீட்டை வாயிலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

யா / திருக்குடும்பக் கன்னியர் மடம்
இன்ரறக்ட் கழகம்

(இ)

---

உரிமை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட

## சகல துறை வர்த்தகர்களுக்குமான அறிவித்தல்

30-10 93 [இன்று] சனிக்கிழமை பி.ப. 2. 30 மணிக்கு சுன்னாகம் வர்த்தகர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் (மருதனார்மடம்) யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு சகல துறையைச் சார்ந்த வர்த்தகர்களும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு:- தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்கள்.

சோ. அருணகிரிநாதன்
செயலாளர்

(சி 7807)

---

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்-வரையறுக்கப்பட்டது
31-12-1991-ல் முடிவடைந்த நிதியாண்டுக்கான

## கிராமிய வங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 31-12 1991 ல் முடிவடைந்த வருடத்துக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டு இருப்பதால், கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிடப்படும் திகதிகளில் தமது வங்கி சேமிப்பு கையேடுகளுடன் இல. 291, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் வந்து தமது மீதிகளை உறுதிப்படுத்திச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

03-11-1993 - 9 00 மணி முதல் 4-00 மணிவரை க/கு இல. 01 746 50012-51200
04-11-1993 - 9-00 மணி முதல் 4-00 மணிவரை 51201-51550
05 11-1993 - 9 00 மணி முதல் 4·00 மணி வரை 51551-51941

மேற்குறிப்பிட்ட திகதிகளில் வந்து உறுதிப்படுத்தாத வாடிக்கையாளர்களின் க/கு மீதிகள் வங்கியின் பேரேட்டின்படி உறுதிப்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

28 10-1993

ப. மலரகிதசர்மா
சிரேஷ்ட கணக்காய்வாளர்

(சி/7802)

---

## கருத்தரங்கு

''கிராமிய அபிவிருத்தி'' என்னும் தலைப்பிலான கருத்தரங்குத் தொடரொன்று இன்றும், நாளையும் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கை வலி. தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசமும், சர்வோதயமும் இணைந்து நடாத்தவுள்ளன. [11]

## மெய்வல்லுநர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தை (J. D.A.A.A) அமைப்பதற்கான கூட்டம் ஒன்று நாளை மாலை 4 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் யாழ். மாவட்டக் கழகங்கள் தமது பிரதிநிதிகளை இக்கூட்டத்தில் பங்குபற்ற அனுப்பும்படி கேட்கப்பட்டிருக்கிறது.

## கதம்ப நிகழ்ச்சி

(குருநகர்)

யாழ் திருமறைக் கலா மன்றத்தின் பிரதான வீதிக் கலையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு மாதாந்த கதம்ப நிகழ்ச்சி நடைபெற இருக்கின்றது.

மன்ற கவின் கலைகள் பயிலக மாணவர்களின் இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளும், மாதாந்தப் பாடல் அம்சமும் நிகழ்ச்சியில் இடம்பெறும் (21

## அனுமதி அட்டைகள்

எதிர் வரும் 06ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டுறவுப் பரிசோதகர் தரம்11 'ஆ' பிரிவிற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான அனுமதிஅட்டைகள் தபாலில் இடப்பட்டுள்ளனஎன்று யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவிக்கின்றார்.

## மலர் வெளியீடு

'தவத்திரு வடிவேற் சுவாமி மலர்' வெளியீட்டு விழா நாளைஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில் கல்யாணமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## சேகரிப்பு

யாழ் றோட்டரக்ற் கழகத்தால் நடாத்தப்படவுள்ள மனையியற் கண்காட்சிக்கான

---

## வலைப்பந்தாட்ட சங்க அங்குரார்ப்பண கூட்டம்

யாழ்மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் அமைப்பதற்கான அங்குரார்ப்பண கூட்டம் நாளை ஞாயிறு காலை 10.00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள அரசியல்துறை மாவட்ட செயலகத்தில் நடைபெற இருப்பதனால் சங்கத்தில் சேர்ந்து கொள்ள விண்ணப்பித்த கழகங்களும், சேர விரும்பும் கழகங்களும் சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

இந் நிகழ்வின் போது வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான தேர்வில் தகைமை பெற்ற நடுவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம் பெறும் எனவே இப்பரீட்சையில் சித்தியடைந்த சகலரும் தமக்குரிய சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 29.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11475
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்: இல்லை.
வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
40-2829, 26 6745, 41 6296, 27-9489, 28-0587' 24 4560, 24-6972, 41-9663, 24-9938, 26-8600, 26-5848, 42-0970.

## மரண அறிவித்தல்கள்



## திரு. தி. சி. கணேசலிங்கம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு தி.சி. கணேசலிங்கம் 28-10 93இல் கொழும்பில் காலமானார்.

இவர் யோகராணியின் அன்புக் கணவரும் துவாரகனின் அன்புத் தந்தையுமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கணேசலிங்கம் துவாரகன்
யாழ். இந்து மாணவன்
(மகன்)


''பிருந்தாவனம்''
கோணாமலை வீதி,
திருநெல்வேலி,

(6427)

இனிய தோழனே
இதயம் விம்மி அழுகின்றோம்
இறுதி வரையில் - உன்
இலட்சிய தாகத்துடன் எழுவோம்
ஈழத்தின் எல்லைகளை மீட்போம்
இது உறுதி

(சி-7805) **போராளி நண்பர்கள்**

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



## கப்டன் கனோஜி அம்மான்

(கிருஷ்ணபிள்ளை சிவராசா)

மலர்வு: 04-02-1951 உதிர்வு:- 30-10-1988

அன்பின் உறைவிடமே பண்பின் இருப்பிடமே-எம்
அருமை செல்வமே எங்கள் சிவா-உன்
முன்னே மூவரும் பின்னே மூவரும்-என
எம் ஏழ்வரில் நடுநிசி நாயகனே
என்றும் எங்கள் அணையா ஜோதியே
மூத்தவர்கள் தம்பி என்ற போதும்
இளையவர்கள் அண்ணா என்ற போதும்-உனைப்
பெற்றவர்கள் பூரித்துப்போன நாளை என்று தான் மறப்போம்
இறுதியில் மண்ணுக்காக மரணித்து மாவீரன் பேர் கேட்டாய்
உனைப் பிரிந்து ஆண்டுகள் ஐந்து கடந்தும்
எங்கள் இதயத்தில் சிகரமாய் வீற்றிருக்கின்றாய்.

''கனோஜி இல்லம்''
சிவராசா வீதி,
கம்பர் மலை,
வல்வெட்டித்துறை.

உன் பிரிவால் என்றும் வாடும்
அம்மா, ஐயா, அண்ணாமார்,
அண்ணிமார், தம்பிமார்,
மைத்துனிமார், பெறாமக்கள்,
உறவினர்கள், அயலவர்கள்,
நண்பர்கள்.

(6433)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 31-12 1991 ல் முடிவடைந்த வருடத்துக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டு இருப்பதால், கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிடப்படும் திகதிகளில் தமது வங்கி சேமிப்பு கையேடுகளுடன் இல. 291, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் வந்து தமது மீதிகளை உறுதிப்படுத்திச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

03-11-1993 - 9 00 மணி முதல் 4-00 மணிவரை க|கு இல. 01 746 50012-51200

04-11-1993 - 9-00 மணி முதல் 4-00 மணிவரை 51201-51550

05 11-1993 - 9 00 மணி முதல் 4·00 மணி வரை 51551-51941

மேற்குறிப்பிட்ட திகதிகளில் வந்து உறுதிப்படுத்தாத வாடிக்கையாளர்களின் க|கு மீதிகள் வங்கியின் பேரேட்டின்படி உறுதிப்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

28 10-1993

ப. மலரகிதசர்மா
சிரேஷ்ட கணக்காய்வாளர்

(சி|7802)

## அறிவித்தல்

### மானிப்பாய் கோவில்பற்று பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்

சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 05-11·93 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

1. லிகிதர் குறியீட்டு இல 302;16 (இரண்டு வெற்றிடம்)

**தகைமைகள்:** க.பொ.த. (சாதாரணம்) தரத்தில் 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம், சிங்களம்/ தமிழ் பாஷை என்பவற்றை உள்ளடக்கியதான 6 பாடங்களில் சித்தி

**மேலதி தகைமைகள்;** தமிழ்ஆங்கிலம் தட்டெழுத்து தெரிந்தவராகவும் கூட்டுறவு பயிற்சி பெற்றவராகவும் இருப்பது விரும்பத்தக்கது.

**வயது:** 18—35 வரை (சங்க பணியாளர்கட்கு வயதெல்லை கட்டுப்பாடு இல்லை)

**சம்பளம்:** 700 — 950
15×10, 20×5

2. அச்சு கோர்ப்பாளர் — தற்காலிகம் (ஒருவெற்றிடம்)

**தகைமைகள்:** க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயது:** 20—40 வரை

**சம்பளம்:** தொழில் திணைக்களத்கால் வழங்கடபடும் நடைமுறையிலுள்ள நாளாந்த சம்பளம்.

**அனுபவம்:** அச்சுக்கோர்ப்பு தொழிலில் 3 வருட அனுபவமும் தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் அச்சுக் கோர்க்க தெரிந்திருக்கவும் வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ரூ. 5/- செலுத்தி சங்கத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தை பூரணப்படுத்தி தலைவர் மானிப்பாய் கோவில்பற்று ப நோ.கூ. சங்கம் மானிப்பாய் என்ற விலாசத்திற்கு 5-11-93ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
மானிப்பாய் கோ.ப.நோ.கூ. சங்கம்

1993-10-27 (சி-7803)

நடைபெறவுள்ள கூட்டுறவுப் பரிசோதகர் தரம்11 'ஆ' பிரிவிற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான அனுமதிஅட்டைகள் தபாலில் இடப்பட்டுள்ளனஎன்று யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவிக்கின்றார்.

## மலர் வெளியீடு

'தவத்திரு வடிவேற் சுவாமி மலர்' வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில் கல்யாணமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## சேகரிப்பு

யாழ் றோட்டரக்ற் கழகத்தால் நடாத்தப்படவுள்ள மனையியற் கண்காட்சிக்கான கைப்பணி பொருள்கள், பூக்கள், ஓவியங்களின் சேகரிபபு எதிர்வரும் முதலாம், 3ஆம் திகதிகளில் யாழ். விக்டோரியா வீதியிலுள்ள கலாலயா நுண்கலை மனையியல் நிறுவனத்தில் நடைபெறும்.

## பிரிவுபசாரமும் வரவேற்பும்

யாழ். இந்துமகளிர் கல்லூரியின் அதிபராக பணியாற்றி ஒய்வு பெற்றுள்ள திருமதி திவ்விய சிரோன்மணி நாகராசா அவர்களுக்கு பிரிவுபசாரமும் புதியஅதிபராக பதவி ஏற்றிருக்கும் திருமதி சரஸ்வதி ஜெயராசா அவர்களுக்கு வரவேற்புபசார விழாவும் இன்று முற்பகல் 9.30மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## நிறைவு நாள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த இரு மாதங்களாக இடம்பெற்று வந்த இதழியல் அடிப்படைக் கற்கை நெறியின் நிறைவு நாளும் கற்கைநெறி பயின்றோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை பி.ப 3.00 மணிக்கு வணிக முகாமைத்துவ மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

**அறிமுகப்படுத்துகிறோம்!**
**நியூ இன்டோ சைனீஸ்**
(ஆங்கில கன்னியர்மட பாடசாலைக்கு முன்பாக)
மீன் சாப்பாடு ) - 30/-
இறைச்சி " )
மரக்கறி சாப்பாடு 25/-
111/4 மடம் வீதி,
யாழ்ப்பாணம்.
(6435)



## திரு. தி. சி. கணேசலிங்கம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு தி.சி. கணேசலிங்கம் 28-10 93இல் கொழும்பில் காலமானார்.

இவர் யோகராணியின் அன்புக் கணவரும் துவாரகனின் அன்புத் தந்தையுமாவார்.


இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

''பிருந்தாவனம்''
கோணாமலை வீதி,
திருநெல்வேலி,

கணேசலிங்கம் துவாரகன்
யாழ். இந்து மாணவன்
(மகன்)

(6427)



## சிவசம்பு சிவபாலன்

(ஆசிரியர்)

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகக் கொண்டவரும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்தவரும், முன்னாள் அச்சுவேலி மகாவித்தியாலய ஆசிரியருமான சிவசம்பு சிவபாலன் 22·10 93 அன்று பிரான்ஸில் காலமானார். இவர் கலாநிதி (பட்டு) (பிரான்ஸ்) அவர்களின் அருமைக் கணவரும், பிரசாந், பிரவீனா, பிரதீகா (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும், சாவகச்சேரி சிவசம்பு (மெக்கானிக்) தங்கம்மா தம்பதிகளின் புத்திரனும், நீர்வேலி வடக்கு முத்தையா அப்பாப்பிள்ளை (நித்திலைற்) தம்பதிகளின் மூத்த மருமகனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 31-10-93-ல் பிராண்ஸில் நடைபெறும். அதேதினம் நீர்வேலி வடக்கு 'ஞானகலாவாசா' இல்லத்தில் அவருடைய ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

''ஞானகலாவாசா,''
நீர்வேலி வடக்கு.

சி. முத்தையா அப்பாப்பிள்ளை,
குடும்பத்தினர்.

(6430)